நமது ஒரே நோக்கம்- 2026-ஆம் ஆண்டு தேர்தல் வெற்றி மட்டும்தான்!

2-வது முறையாக கழகத் தலைவரை தமிழ்நாட்டு முதலமைச்சராக்குவதே நம் பொறுப்பு!

நாகை மாவட்டக் கழக சார்பு அணிகள் கூட்டத்தில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

நாகையில் நடைபெற்ற, நாகை மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் தி.மு.கழக இளைஞர் அணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றினார்.

நாகை, நவ.26-

நாகையில் நடைபெற்ற, நாகை மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் தி.மு. கழக இளைஞர் அணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் கலந்துகொண்டு எழுச்சிமிகு உரையாற்றினார்.

அவர் ஆற்றிய எழுச்சியுரை வருமாறு:-

அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி அவர்களே, நாகப்பட்டினம் மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைவருமான கௌதமன் அவர்களே, இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் இளையராஜா அவர்களே மற்றும் கழக சார்பு அணியினர் உள்ளிட்ட அனைவருக்கும் என் வணக்கத்தையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நேற்று நள்ளிரவு திருச்சியில் இருந்து துறையூர் வந்து, கலைஞரின் திரு உருவச்சிலையைத் திறந்து வைத்துவிட்டு, வழிநெடுக மக்களின் வரவேற்பு, கழகத்தின் வரவேற்பை எல்லாம் ஏற்றுக் கொண்டு விட்டு நேற்று இரவு 11 மணி அளவில் நாகப்பட்டினம் வந்தேன். 11 மணி அளவிலும் தெருவெல்லாம் நம் கழகத் தோழர்களும் அணிகளைச் சார்ந்த நண்பர்களும், நிர்வாகிகளும், கழக மூத்த முன்னோடிகளும், பொதுமக்களும் ஒரு சிறப்பான வரவேற்பை அளித்தார்கள். அதற்கு இந்த நேரத்தில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மறக்க முடியாத சுற்றுப்பயணம்.

நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், இன்றைக்கு நாகை மாவட்ட சார்பு அணி நிர்வாகிகளை எல்லாம் சந்தித்து உரையாற்றுவதில் மிகுந்த பெருமை அடைகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன். முத்தமிழறிஞர் கலைஞரின் சொந்த மாவட்டமான நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு எத்தனையோ முறை வருகை தந்து இருக்கிறேன். கழகத்தின் அடிப்படை உறுப்பினராக, இளைஞர் அணிச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, விளையாட்டுத் துறை அமைச்சராகப் பலமுறை வந்து இருக்கிறேன். ஆனால், இந்தப் பயணம் என் வாழ்வில் மறக்க முடியாத ஒரு சுற்றுபயணம். ஏனென்றால், துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டு முதன் முறையாக உங்களை எல்லாம் சந்திக்க வருகை தந்திருக்கிறேன்.

தலைவர் அந்தப் பொறுப்பைக் கொடுத்தவுடன் தமிழ்நாட்டில் இருந்து எல்லா நிர்வாகிகளும் சென்னைக்கு என்னை வாழ்த்த படையெடுத்து வந்தார்கள். நான் அப்போது அவர்கள் எல்லோரிடமும் ஒரேயொரு வேண்டுகோள் தான் வைத்தேன். `தயவு செய்து யாரும் வராதீர்கள் நானே உங்கள் மாவட்டத்திற்கு வருகிறேன். உங்களின் வாழ்த்துகளைப் பெறுவதற்கு நான் உங்களை வந்து சந்திக்கிறேன்' என்று சொன்னேன். அந்த வகையில், இன்றைக்கு உங்களின் வாழ்த்துகளையும் பெறுவதற்காகத்தான் இன்றைக்கு வந்து இருக்கிறேன்.

நம் தலைவரின் சிறப்பு

இன்று காலை அண்ணன் அக்கரைப்பேட்டை மனோகரன் அவர்களின் இல்லத் திருமண விழா, நம் நாகை மாவட்டத்தில் நம் மாவட்ட கழகச் செயலாளர் அண்ணன் கௌதமன் ஏற்பாடு செய்திருந்த ஒரு நலத்திட்ட நிகழ்ச்சி. 2,500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி. அதில் எல்லாம் கலந்து கொண்டு இப்பொழுது சார்பு அணியினரான உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன். நம் நாகை மாவட்ட கழக உடன்பிறப்புகள் மிகவும் உறுதியானவர்கள். கொள்கைப் பற்று மிக்கவர்கள்.

இந்த நாகப்பட்டினம் மாவட்டத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கால்படாத கிராமமே இல்லை என்று சொல்லலாம். அது மட்டுமல்ல நம் தலைவர் கழகத் தலைவர் அவர்கள் கொடி ஏற்றாத ஒரு தெரு கிடையாது என்று சொல்லும் அளவிற்குப் புகழ் பெற்ற மாவட்டம் இந்த நாகை மாவட்டம். நம் கழகத் தலைவர் அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, சந்தித்த அத்தனை தேர்தலிலும் வெற்றி பெற்று இருக்கிறோம் என்பது நம் தலைவரின் சிறப்பு.

குறிப்பாக, இந்த ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் நம் நாகை மக்களவைத் தொகுதியில், நம் கூட்டணி வேட்பாளர் அண்ணன் செல்வராஜ் அவர்களை சுமார் 2 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தீர்கள் என்றால், அதற்கு முழுக் காரணம் நீங்கள்தான். அதற்கும் இந்த நேரத்தில் நன்றியையும், வாழ்த்துகளையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2026 சட்டமன்றத் தேர்தல்

இப்பொழுது அடுத்து வருகின்ற தேர்தல் 2026 சட்டமன்றத் தேர்தல். உங்களுக்குத் தெரியும் எவ்வளவு முக்கியமான தேர்தல் என்று. இன்றைக்குத் தமிழ்நாட்டின் சட்டமன்றத் தேர்தல் தொடர்பான பணிகளை ஆரம்பித்துள்ள முதல் இயக்கம், ஒரே இயக்கம் நம் திராவிட முன்னேற்ற கழகம் தான். எப்படி இன்றைக்கு நம் பணிகளை முதலில் ஆரம்பித்து இருக்கிறோமோ அதே போல் தேர்தல் முடிவிலும் நாம் கண்டிப்பாக முதல இடத்தில் வந்தாக வேண்டும். அதற்கு நீங்கள் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும்.

தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவை நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதேபோல் களத்தில் சட்டமன்றத் தேர்தல் பணிகளை உங்களுடன் இணைந்து ஒருங்கிணைக்கச் சட்டமன்றத் தொகுதி வாரியாக 234 தொகுதிகளுக்கும் சட்டமன்றப் பார்வையாளர்களையும் நியமித்தார். அதன் தொடர்ச்சியாகவே தலைவரின் உத்தரவின் பேரில், இந்தக் கூட்டம் இவ்வளவு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

சார்பு அணிகளின் சந்திப்பு

சார்பு அணிகளின் கூட்டம். அணி என்றால், ஆங்கிலத்தில் `விங்ஸ்' என்று சொல்வார்கள். `யூத் விங்', `ஐ.டி.விங்', `உமன்ஸ் விங்' அப்படி என்று சொல்வார்கள். அதற்கு இன்னொரு அர்த்தம் இருக்கிறது. `விங்ஸ்' என்றால் `சிறகுகள்' என்று அர்த்தம். `யூத் விங்', `ஸ்டூடன்ட் விங்', `லேபர் விங்' என்று சொல்கிறோம். இப்படிப் பல சிறகுகளைக் கொண்டதுதான் நம் கழகம். இந்தச் சிறகுகள் எல்லாம் சிறப்பாகப் பறப்பதால்தான் வெற்றியை, தமிழ்நாட்டு மக்கள் நம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த விங்ஸ் எல்லாம் இணைந்து சிறப்பான சிறகுகளாகச் செயல்படுவதால் தான் இன்றைக்கு நம் கழகம் உயர உயர பறந்து கொண்டிருக்கிறது. எனவே, அந்தக் களப்பணி தான் நம் வெற்றியை வெளிப்படுத்தும். சார்பு அணி நிர்வாகிகள், நாம் வெறும் சார்பு அணி தானே என்று இருந்துவிடக்கூடாது.

இன்றைக்கு நம் மாவட்டக் கழகச் செயலாளர் கௌதமன் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். கண்டிப்பாக அவர் சொன்ன வார்த்தையைக் கண்டிப்பாகக் காப்பாற்ற வேண்டும். காப்பாற்றுவார் என்று நான் நம்புகிறேன். ` சார்பு அணி தானே' என்று இன்று ஏதோ ஒரு கூட்டத்தை நடத்தி விட்டுப் போய்விடக்கூடாது. அந்தச் சார்பு அணிக்கான முக்கியத்துவத்தை மாவட்டக் கழகச் செயலாளர் நீங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேதி கேட்டு இருக்கிறார். தேதி நீங்களே சொல்லுங்கள். என்றைக்கு என்று சொல்லுங்கள் நானே வந்து விடுகிறேன். ஆனால், எனக்குத் தேவை மாற்றுக் கட்சியில் இருந்து சேர்க்கிறீர்கள் என்று சொன்னீர்களே அந்த உறுப்பினர் அட்டையுடன் ஆதாரத்தோடு எனக்கு வேண்டும். அதை நான் சரிபார்த்து விட்டுத்தான் வருவேன். அதை நீங்கள் கொடுத்துவிட்டீர்கள் என்றால், அன்பகத்தில் அதற்கு ஒரு குழுவை வைத்திருக்கிறோம்.

இளைஞர் அணியில் சேர்க்கும் பொழுது ஒவ்வொருவரையும் தொலைபேசியில் அழைத்து, நீங்கள் எந்த இயக்கத்தில் இருக்கிறீங்க? உங்களின் கொள்கை என்ன? என்று கேட்டுவிட்டுத் தான் உறுப்பினர் கார்டு கொடுக்கிறோம். அதனால், நீங்கள் அந்த உறுப்பினர் அட்டை எல்லாம் கொடுத்து விட்டீர்கள் என்றால், நீங்கள் சொல்கின்ற தேதியிலேயே நான் வந்து விடுகிறேன். மழை இருந்தாலும் சரி, மழை இல்லை என்றாலும் சரி, பரவாயில்லை கண்டிப்பாக வந்து விடுகிறேன்.

இளைஞர் அணிதான் கொடுத்தது

நம் சார்பு அணி நிர்வாகிகள், நாம் வெறும் சார்பு அணிதான் என்ற மனநிலையில் இருந்து விடக்கூடாது. ஏனென்றால், இன்றைக்குத் தமிழ்நாட்டின் முதலமைச்சரையே இளைஞர் அணி தான் கொடுத்து இருக்கிறது. கழகத்தின் தலைவரையே இளைஞர் அணிதான் கொடுத்து இருக்கிறது. கழகத்தின் பொதுச் செயலாளரை மாணவர் அணி கொடுத்திருக்கிறது. அதேபோல் மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வழக்கறிஞர்கள் அணியிலிருந்து பல்வேறு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்து இருக்கிறார்கள். நம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் இளைஞர் அணியில் சிறப்பாகப் பணியாற்றி, இன்று மாவட்ட கழகச் செயலாளராக ஆகியிருக்கிறார்.

இங்கு இருக்கின்ற மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகளில் பலர் சார்பு அணியில் சிறப்பாகச் செயல்பட்டதால்தான் அந்த உயர்வு கிடைத்து இருக்கிறது. நம் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் கௌதமன் அவர்களும் மீனவர் அணியில் சிறப்பாகச் செயல்பட்டதால்தான் இன்றைக்கு மாவட்டச் செயலாளராக வந்து இருக்கிறார். அதை அடிக்கடி அவருக்கு ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அதனால் சார்பு அணிகளுக்கான முக்கியத்துவம் எப்பொழுதுமே கழகத்தில் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

அணிகள் என்பது கழக அமைப்பில் முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றுவதற்கான ஒரு பயிற்சிக் களம் என்று எடுத்துக் கொள்ளலாம். உங்களின் பணியை, கடமையை நீங்கள் சரியாகச் செய்து கொண்டு வந்தீர்கள் என்றால் ,உங்களுக்கான அங்கீகாரத்தை சரியான நேரத்தில் நம் தலைவர் அவர்கள் கண்டிப்பாக உங்களுக்குக் கொடுப்பார்.

3 மணி நேரம் ஒதுக்குங்கள்

உங்களால் ஒரு 200, 250 வாக்குகள் பெற்றுத் தர முடியும் என்ற நிலைமை வந்துவிட்டால், உங்களை யாராலும் தவிர்த்துவிட முடியாது. நீங்க சொல்வதுதான் சட்டம். அப்போது நீங்கள் சொல்கின்ற 250 பேர்களின் வாக்கு, உங்கள் கையில் இருக்கிறது என்றால், யாராக இருந்தாலும் எந்தப் பொறுப்பில் இருந்தாலும் உங்களிடம் வந்துதான் ஆக வேண்டும். தலைவர் அவர்கள் ஏற்கனவே சொல்லி இருக்கிறார். கழகப் பணிக்காக ஒரு நாளில் இரண்டு மணி நேரம் 3 மணி நேரத்தை மட்டும் ஒதுக்குங்கள். வார இறுதியில் இரண்டு நாட்களில் ஒரு நாளை கழகப் பணிக்காக ஒதுக்குங்கள்.

தேர்தலுக்காக வாக்காளர் பட்டியலைச் சரிபார்ப்பது, கழகத்திற்கு ஆதரவான குடும்பங்களைத் தக்க வைப்பது, நடுநிலையான வாக்காளர்களை, கழக ஆதரவாளர்களாக மாற்றுவது போன்ற பணிகளைக் கழக அமைப்பினரும், சார்பு அணியினரும் இன்றிலிருந்து துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான வழிகாட்டுதல்களைத் தலைமைக் கழகமும், மாவட்டக் கழகமும் உங்களுக்கு வழங்கும்.

கலந்துரையாடல் கூட்டம்

அதேபோல் பி.எல்.ஏ-2, பி.எல்.சி நிர்வாகிகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கான பயிற்சிகளை மாவட்ட கழகத்தோடு இணைந்து வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாதம் ஒரு முறையாவது மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்களில் கலந்துரையாடல் கூட்டத்தை நடத்துங்கள்.

நம் நோக்கம் ஒரே நோக்கம் 2026-ஆம் ஆண்டுத் தேர்தல் வெற்றி மட்டுமாகத்தான் இருக்கவேண்டும். அதற்கான முன்னெடுப்புகளை ஆலோசனைகளை நீங்கள் எல்லாம் மேற்கொள்ள வேண்டும். வாக்காளர்களைச் சந்திக்க நிறைய செலவு செய்ய வேண்டும் என்றெல்லாம் எண்ண வேண்டாம்.

கருத்தரங்கம், தெருமுனைக் கூட்டம், பிரச்சாரங்கள், உதவி முகாம்கள், நலத்திட்ட நிகழ்ச்சிகள் இப்படி எளிமையான நிகழ்ச்சிகள் மூலமாக மக்களிடம் சென்று பேசுங்கள். அவர்களின் குறைகளைக் கண்டுபிடியுங்கள். அவர்களிடம் பேசுங்கள். கண்டிப்பாக இந்த மூன்றரை வருடத்தில் திராவிட மாடல் ஆட்சியில் நம் தலைவர் அவர்கள் கொண்டு வந்த ஏதாவது ஒரு திட்டம் வாயிலாக ஒரு வீட்டில் கண்டிப்பாக ஒருத்தராவது ஒரு பயனாளியாக இருப்பாங்க. அந்தத் திட்டத்தை நீங்கள் சென்று சொன்னீர்கள் என்றால், அவர்கள் புரிந்து கொள்வார்கள். மக்களுக்கு மறதி இருக்கும்.

இன்னும் சொல்லப்போனால், முக்கியமான ஐந்து திட்டங்களை மட்டும் உங்களுக்குச் சொல்கிறேன். தலைவர் அவர்கள் முதலமைச்சராகித் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம். எதிர்கட்சிகள் நிறைவேற்றவே முடியாது என்று சொன்ன திட்டம். மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதி திட்டம். இப்பொழுது அதை, `பிங்க் பஸ்' என்று சொல்கிறார்கள். நிறைய பேர் அதை, `பிங்க் பஸ்' என்றுகூடச் சொல்வதில்லை. தலைவர் பெயரைச் சொல்லி `ஸ்டாலின் பஸ்' என்று கூப்பிடுகிறார்கள். அந்தத் திட்டத்தின் வாயிலாக, வேலைக்குச் செல்கின்ற பெண்கள் அந்தத் திட்ட பயனாளிகள் ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள்.

தமிழ்ப்புதல்வன் திட்டம்

அது மட்டுமல்ல, பெண்கள் படிக்க வேண்டும். உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காகப் புதுமைப்பெண் என்ற திட்டத்தின் மூலம், அரசு பள்ளியில் படித்து, கல்லூரிக்குப் படிக்கச் சென்றால், எந்தத் தனியார் கல்லூரியாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு ஊக்கத்தொகையாக மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. அதேபோல் மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் என்ற திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

இந்தியாவிலேயே முதன் முறையாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது, நம் தமிழ்நாட்டில்தான். மற்ற மாநிலங்கள் எல்லாம் இவற்றைப் பின்பற்ற தொடங்கி இருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஒரு திட்டம். கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். சென்ற செப்டம்பர் மாதம் அறிமுகப்படுத்தி இன்றைக்கு ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் ஒவ்வொரு மாதமும் மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். கடந்த மூன்று மாதங்களாகச் சுற்றுப்பயணங்களில் பார்க்கிறேன். பெண்கள், மகளிர், தாய்மார்கள் மிகுந்த வரவேற்பு கொடுக்கிறார்கள். சென்ற நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியில் பார்த்தீர்கள் என்றால், இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு, மகளிர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நம் கூட்டணிக்கு வாக்களித்து இருக்கிறார்கள். மிகப்பெரிய ஆதரவு கூடி இருக்கிறது. இதையெல்லாம் மக்களிடம் எடுத்துச் சென்று சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காலை உணவுத் திட்டம்

நாகை மாவட்டத்திற்குச் செய்யப்பட்டுள்ள திட்டங்களைப் புள்ளிவிவரத்தோடு எடுத்துச் சொல்லுங்கள். இன்றைக்கு நாகை மாவட்டத்தில் மட்டும் கட்டணமில்லாப் பேருந்து வசதித் திட்டத்தின் வாயிலாக இந்தத் திட்டத்தின் கீழ் இந்த மூன்றரை வருடத்தில் மட்டும் இரண்டு கோடியே 17 லட்சம் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலமாக ஒன்பதாயிரம் மாணவ மாணவிகள் நாகை மாவட்டத்தில் மட்டும் மாதம் ஆயிரம் ரூபாய் மாதந்தோறும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் வாயிலாக இந்த நாகை மாவட்டத்தில் மட்டும் 18 ஆயிரத்து 500 மாணவர்கள் ஒவ்வொரு நாளும் பயன்பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் கீழ் இந்த நாகை மாவட்டத்தில் மட்டும் ஒரு லட்சத்து 32 ஆயிரம் மகளிர் பயனடைந்து வருகிறார்கள். இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தலுக்கு முன்பாக ஒவ்வொரு வாக்காளரையும் குறைந்தது நாம் ஒரு மூன்று முறையாவது நான்கு முறையாவது சந்தித்து அவர்களுடன் கலந்துரையாட வேண்டும். பொதுமக்கள் வைக்கின்ற கோரிக்கைகளை உங்களால் முடிந்தவரை நிறைவேற்றித் தர முயற்சி செய்யுங்கள். உங்களால் முடியாதவற்றைச் சட்டமன்ற உறுப்பினர், பொறுப்பு அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்ட அமைச்சர், மாவட்டச் செயலாளர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அதை எப்படியாவது சரி செய்ய முடியுமா என்று உங்கள் அளவில் நீங்கள் முயற்சி செய்யுங்கள்.

கழகத்திற்கு மட்டும்தான் வரலாறு

மிக முக்கியமாகக் களத்தில் எப்படி உழைக்கிறீர்களோ? அதேபோல் இன்றைக்குச் சமூக வலைத்தளத்திலும் உழைக்க வேண்டும். களம் எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்குச் சமூக வலைத்தளமும் முக்கியமாகிவிட்டது. சமூக வலைத்தளங்களிலும் நீங்கள் ஆக்டிவாகச் செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்வது மற்ற இயக்கங்கள் மாதிரி பொய் செய்திகளையோ புரட்டுச் செய்திகளையோ போடாதீர்கள். அதற்கு நமக்கு அவசியமே கிடையாது.

நம் கழகத்திற்கு மட்டும்தான் வரலாறு இருக்கிறது. எனவே அந்த வரலாற்றைப் பதிவு செய்யுங்கள். மற்ற கட்சிகளுக்கு எல்லாம் வரலாறும் கிடையாது, எதுவும் கிடையாது. அவர்களுக்கு வெறும் தி.மு.க-வை திட்டுவதும், கலைஞர் மீது அவதூறு பேசுவதும், நம் தலைவரைப் பற்றி அவதூறு செய்திகளைப் பரப்புவது மட்டும்தான் அவர்களின் வேலையாக இருக்கும். அவர்களுக்கு நீங்கள் தகுந்த பதிலடி கொடுங்கள்.

ஊடகங்கள் எல்லாம் உண்மையைச் சொல்லுமா என்று தெரியாது. எதிர்க்கட்சிகள் நம்மை விமர்சிக்க எதுவுமே இல்லாமல் வெறும் வதந்தியை மட்டும் பரப்புவார்கள். ஆகவே நீங்கள் ஒவ்வொருவருமே ஒரு ஊடகமாகச் செயல்பட வேண்டும். கழக அணி, நம் தலைவர் சொன்னதைப் போல் 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்று முப்பெரும் விழாவில் நம் தலைவர் அவர்கள் சொன்னார்கள் என்றால், அது உங்கள் மீது இருக்கின்ற அந்த நம்பிக்கையில்தான் சொல்லி இருக்கிறார்.

எப்படி நாடாளுமன்ற தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் நமக்குக் கொடுத்தார்களோ? அது ஒரு மிகப்பெரிய சான்றிதழ். கண்டிப்பாக ஒரு மிகப்பெரிய வெற்றிக் கூட்டணியை, கொள்கைக் கூட்டணியை நம் தலைவர் அவர்கள் அமைப்பார்கள்.

எதிர் தரப்பில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

அ.தி.மு.க-வின் பொருளாளர் அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் முன்னாள் அமைச்சர் இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு நிகழ்ச்சியில் என்ன பேசினார் என்பது உங்களுக்குத் தெரியும். ஞாபகம் இருக்கிறதா? ஓபனாகவே சொல்லிவிட்டார். என்ன ஒருத்தன் வந்தான். 100 கோடி கேட்கிறான். 20 தொகுதி வேண்டும் என்கிறான். இப்படிப் பேரம் பேசுகின்ற கூட்டணிதான் அந்தக் கூட்டணி. ஆனால், நம் கூட்டணி, கொள்கை கூட்டணி.

தலைவர் அவர்கள், எப்பொழுது நம் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றாரோ அதன் பிறகு சந்தித்த அத்தனை தேர்தலிலும் வெற்றியை மட்டுமே நாம் சந்தித்துக் கொண்டு இருக்கிறோம்.

கண்டிப்பாக, 2026-ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக நம் தலைவர் அவர்களை முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வைக்க வேண்டியது, நம் பொறுப்பு. அந்த அளவிற்குச் சிறப்பான முதலமைச்சராக இந்தியாவிலேயே நம்பர் ஒன் முதலமைச்சராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். மக்களுக்கான பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அணி

தலைவர் சொன்ன 200 தொகுதிகளின் வெற்றி உங்கள் கையில்தான் இருக்கிறது. நம் அமைச்சர் சொன்னதைப் போல் மூன்று தொகுதிகளின் வெற்றியை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். 200 தொகுதிகளில் 3 கன்ஃபார்ம் இன்னும் 197 தொகுதிகள்தான் பாக்கி. எனவே கழகத்தின் வீரர்கள் உங்களை நம்பிதான் இதை நம் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார். ஆகவே, தலைவர் அவர்கள் நினைத்த அந்த இலக்கு மட்டும்தான் நம் கண்களுக்குத் தெரிய வேண்டும். அதற்கு நீங்கள் அனைவரும் 100 சதவிகிதம் அல்ல, 200 சதவிகிதம் அளவிற்கு உழைப்பைத் தர வேண்டும்.

உழைப்பவர்களை நிச்சயம் நம் கழகத்தலைவர் கண்டிப்பாக அங்கீகரிப்பார் என்று கூறிக்கொண்டு இங்கு 23 அணிகள் இருக்கலாம், மாவட்டம், ஒன்றியம், நகரம், பேரூர் என்று பல அமைப்புகள் இருக்கலாம். ஆனால் பெயர்கள் மட்டும்தான் வேறு வேறாக இருக்கிறோம். ஆனால் மனதில் நாம் ஒன்றே ஒன்றை மட்டும் தான் வைத்துக்கொள்ள வேண்டும்.

நாம் அத்தனை பேரும் ஒரே அணி. அது யார் என்றால், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் அணி, என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

இங்கு வரும்பொழுதும் வரவேற்கும் பொழுதும் புதிய புதிய பட்டபெயர்கள் எல்லாம் கோஷம் போட்டு வாழ்த்தினீர்கள் தயவு செய்து தவிர்த்து விடுங்கள். இளைஞர் அணிச் செயலாளர், விளையாட்டுத் துறை அமைச்சர், இப்பொழுது கூடுதல் பொறுப்பு துணை முதலமைச்சர் இதில் எந்தப் பொறுப்பாக இருந்தாலும், என்றைக்கும் நீங்கள் செல்லமாகக் கூப்பிடுவது `சின்னவர்'. என்றைக்குமே எந்தப் பொறுப்பு வந்தாலும் இல்லாவிட்டாலும், எப்பொழுதுமே நான் உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருப்பேன். உங்கள் வீட்டு செல்லப் பிள்ளையாக இருப்பேன். உங்கள் வீட்டிற்கு ஒரு பொறுப்பான பிள்ளையாக இருப்பேன்.

2026-இல் 200 என்ற கழகத் தலைவரின் இலக்கை மனதில் வைத்து, நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்படுவோம் என்று கூறிக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.